


நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க சார்பில் தமிழ்நாடு தலைகுனியாது அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பிரச்சார ஆலோசனை கூட்டம் வீரவநல்லூர் எஸ்.எல்.எம்.மஹாலில் நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் நடைபெற்றது. தலைமைசெயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன் வரவேற்புரையாற்றினார். வி.கே.புரம் நகர செயலாளர் கணேசன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். இந்நிகழ்வில் முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் பங்கேற்று பல்வேறு ஆலோசனை களை வழங்கி உரையாற்றினார். நிகழ்வில் ரவீந்திரநாத்,கோபாலகிருஷ்ணன், அய்யப்பன், பூங்கோதை ஆலடி அருணா,ஆவின் ஆறுமுகம், கணேஷ் குமார் ஆதித்தன், பரணி சேகர்,ஜெகன், முத்துப்பாண்டி, முத்துகிருஷ்ணன், மைக்கேல், தமயந்தி, தமிழ்ச்செல்வன், கணேசன், அபுபக்கர், ராமச்சந்திரன், கதிர்வேல்முருகன், இசக்கி பாண்டியன்,முத்து கணேசன், மணிஷா செல்வராஜ், மணிகண்டன், சிந்தாமதார், டி.வானுமாமலை, செல்வ சூடாமணி, பிரேம் ஆனந்த், உள்பட பலர் கலந்து கொண்டனர்.நிறைவில் சுப்பையா நன்றி கூறினார்.




ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும் தமிழ்நாடு தலை குனியாது 2026 தேர்தல் பரப்புரை சிறப்பு கூட்டம் தமிழக மீன்வளம் மீனவர்நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் தலைமை தாங்கினார் கூட்டத்திற்கு ஓ. பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார் நிகழ்வில் மாநில வர்த்தக அணி இணை செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரி சங்கர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பாவோ பை.மூ.ராமஜெயம், தலைமை செயற்குழு உறுப்பினர் பில்லா ஜெகன், விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ஜனகர், ஒன்றிய செயலாளர்கள் இசக்கி பாண்டியன், இளையராஜா, ஏ.பி. ரமேஷ், நவீன் குமார், கோட்டாளம், பிரம்மசக்தி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி சட்டமன்றத் தொகுதியில் "ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும்" தமிழ்நாடு தலை குனியாது ஓ. பன்னீர்செல்வம் அவர்களின் தேர்தல் பிரச்சார கூட்டத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை அமைச்சர் பெ.கீதா ஜீவன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். நிகழ்வில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி. மார்க்கண்டேயன், கோவில்பட்டி நகர் மன்றத் தலைவர் கருணாநிதி, நகரம் சுரேஷ், ஒன்றிய செயலாளர்கள் முருகேசன், ராதாகிருஷ்ணன், கருப்பசாமி, செல்வராஜ், அன்பு ராஜன், ராமசுப்பு, மும்மூர்த்தி, ராதாகிருஷ்ணன், நவநீத கண்ணன், பொதுக்குழு உறுப்பினர் ரமேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கீரனூர் பேரூராட்சியைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்ட அ.தி.மு.க.வினர் அமைச்சர் அர. சக்கரபாணி முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர்.

## உழைப்பை அள்ளிக்கொடுங்கள்! உதயசூரியன் உதிக்கட்டும்!

# ‘திராவிட மாடல் -2.0’ அமையும் நாள் வரை நமக்கு உறக்கம் இல்லை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, மார்ச் 18–

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளி யிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், ‘உழைப்பை அள்ளிக் கொடுங்கள்’, ‘உதயசூரியன் உதிக் கட்டும்’ என்றும், ‘திராவிட மாடல் 2.0 அமையும் நாள் வரை நமக்கு ஊண் உறக்கம் இல்லை’ என்றும் குறிப்பிட்டுள்ளார்.




**இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-**

**உழைப்பை அள்ளிக்கொடுங்கள்! உதயசூரியன் உதிக்கட்டும்!**

**’ வீடுதோறும் சென்றடைந்துள்ள #DravidianModelஇன் சாதனைகள்!**

**இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகத் தமிழ்நாட்டை முன்னேற்றும் தொலைநோக்குத் திட்டங்கள்!**

**அரணென அனைவருக்குமான தமிழ்நாட்டைக் காக்கும் கொள்கை உறுதி! துணிச்சல்!**

**இதுதான் தி.மு.க.**

**ஏப்ரல் 23 அன்று, தமிழ்நாட்டு மக்கள் தங்கள் வாக்குகளை உதயசூரியன் சின்னத்திலும் நமது மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி யினரின் சின்னங்களிலும் அளிக்க அயராது பாடுபடுவோம்!#Dravidian Model 2.0 அமையும் நாள் வரை நமக்கு ஊண் உறக்கம் இல்லை!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## அ.தி.மு.க.வுக்கு வாய்ப்பே இல்லை!

# எடப்பாடியின் சுயநலத்தால் கட்சி அதலபாதாளத்திற்குச் சென்று விட்டது!

## நெல்லையில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் பேட்டி!

நெல்லை, மார்ச் 18 –

நெல்லை மேற்கு மாவட் டம் அம்பை தொகுதி வீரவநல்லூரில் தமிழ்நாடு தலைகுனியாது தேர்தல் பரப்புரை ஆலோசனை கூட்டம் நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் பங்கேற்று உரையாற்றினார்.

பின்னர் முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் செய்தியாளர்களிடம் கூறியதாவது.

தென் மாவட்டங்களில் தேர்தல் களம் மிகவும் பிரகாசமாக உள்ளது. அனைத்து தரப்பு மக்களும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆட்சிக்கு ஆதரவு தருகின்றனர்.

வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தலில் முதல மைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மீண்டும் இரண்டாம் முறையாக முதலமைச்சராக உறுதியாகப் பொறுப்பேற்பார். என்பது மக்களின் கருத்தாக இருக்கிறது. தி.மு.க. தொண்டர்கள் தன்னை மிகவும் பாச உணர்வோடும் அன்போடும் வரவேற்றனர்.

தாய் அன்போடு தங்களை கட்சியில் இணைத்துக்கொண்ட முதலமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அ.தி.மு.க. கோட்டை என்பது மாறி அதில் ஓட்டை விழுந்து ரெம்ப நாளாகி விட்டது. எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அ.தி.மு.க. தொடர்ச்சியாக 11 தேர்தல்களில் தோல்வி யைச் சந்தித்துள்ளது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர், எம்.ஜி.ஆர்,ஜெயலலிதா ஆகியோர் காலத்திலும் தேர்தல் தோல்விகள் வந்துள்ளன, ஆனால் அவர்கள் கட்சியை மீண்டும் தூக்கி நிறுத்தினார்கள். ஆனால், எடப்பாடி பழனிசாமியால் அது முடியாது.



அவரது சுயநலத்தால் கட்சி அதலபாதாளத்திற்குச் சென்று விட்டது.இனி அ.தி.மு.க.மீண்டு வர வாய்ப்பே இல்லை.கட்சியின் நிறுவனர் எம்.ஜி.ஆர் உருவாக்கிய, ‘கட்சியின் அடிப்படை தொண்டர் களால்தான் பொதுச் செயலாளர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்’ என்ற அடிப்படைச் சட்ட விதியை எடப்பாடி பழனிசாமி திருத்திவிட்டார்.

தற்போது பொதுச்செயலாளர் பதவிக்கு போட்டியிட வேண்டும் என்றால்,10 மாவட்ட செயலாளர்கள் முன்மொழிய வேண்டும்,10 பேர் வழிமொழிய வேண்டும்,5 ஆண்டுகள் தலைமை கழக நிர்வாகியாக இருக்க வேண்டும் என்ற விதியை மாற்றி விட்டனர். இது மிராசுதார்கள், ஜமீன்தார்கள்,பணக்காரர்கள் மட்டுமே பதவிக்கு வரும் வகையிலான விதி. கட்சியின் அடிப்படை விதியை மாற்றியதற்கு எதிராக தான் உரிமையியல் நீதிமன்றத்தில் (Civil Suit) வழக்கு தொடர்ந்துள்ளேன் வழக்கு நடந்து வருகிறது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டால்,தென் மாவட்டங்கள் முதல் அனைத்து மாவட்டங்களிலும் சுற்றுப்பயணம் செய்து தேர்தல் பணியாற்றத் தயாராக உள்ளேன்.தான் ஒரு தொண்டனாகவே தி.மு.க.வில் இணைந்துள்ளேன்.எந்தப் பதவியையும் எதிர்பார்த்து வரவில்லை. வருகின்ற தேர்தலில் போட்டியிடுவது குறித்த முடிவையும் முதலமைச்சர் அவர்களே எடுப்பார்.ரஜினிகாந்த் அவர்கள் மிகவும் அறிவாளி,அவரை குறை சொல்வதற்கு யாருமே இல்லை என்றார்.

இவ்வாறு முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் கூறினார்.



தூத்துக்குடி மாவட்டம் புதூர் ஊராட்சி ஒன்றியம் தப்பாத்தி இலங்கை தமிழர் மறுவாழ்வு மையத்தில் இலங்கை தமிழர் மறு வாழ்வு திட்டத்தின் கீழ் ரூ.20 கோடியே 62.5 லட்சம் மதிப்பீட்டில் 300 வீடுகள் கட்டும் பணிக்கு விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி. மார்கண்டேயன் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார். நிகழ்வில் புதூர் ஒன்றியச் செயலாளர்கள் மும்மூர்த்தி, செல்வராஜ், ராதாகிருஷ்ணன், நவநீத கண்ணன், அன்புராஜன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் கழகத்தலைவர் அவர்களின் தலைமையை ஏற்றும், சிறப்பான நிர்வாகத் திறமையை கருத்தில் கொண்டும் நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் ஒப்புதலோடு நாங்குநேரி மேற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட அரியகுளம் ஊராட்சி மற்றும் சுற்றியுள்ள கிராமங்களை சேர்ந்த 30 க்கும் மேற்பட்ட அ.ம.மு.க.இளைஞர் கள் அரியகுளம் ஊராட்சி செயலாளர் இளையபெருமாள் என்ற ரவி ஏற்பாட்டில் அக்கட்சியிலிருந்து விலகி மேற்கு ஒன்றிய செயலாளர் ஆர்.எஸ்.சுடலைகண்ணு முன்னிலையில் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். நிகழ்ச்சியில் முலைக்கரைப்பட்டி பேரூர் செயலாளர் எஸ்.எஸ்.கே. முருகையா,மறுகால்குறிச்சி ஊராட்சி மன்ற துணை தலைவர் புஷ்பபாண்டி, மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் மாயகிருஷ்ணன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் குமார்,நம்பிராஜன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# ஞானபீடம் – கலைஞர் நினைவிடம்!



**ஐயா!**

**வழக்கமாய்**
**உங்கள் பீடத்திற்கு**
**மலர் கொண்டுவருவேன்;**
**இன்று ஞானபீடம்**
**கொண்டு வந்திருக்கிறேன்**

**உங்கள்**
**தலைமாட்டில் வைத்துத்**
**தலை வணங்குகிறேன்**
**எப்போதும் எனக்கொரு**
**பொன்னாடை போர்த்துவீர்கள்;**

**இப்போது இல்லை**

**பொன்னாடைக்கு மாறாக**
**ஒரு பூ எடுத்துக்கொள்கிறேன்**

**கண்ணீரோடு...**



கவிப்பேரரசு
**வைரமுத்து**




நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் புனித ரமலான் திருநாளை முன்னிட்டு ஏழைகளுக்கு ஃபித்ரா அரிசி வழங்கும் நிகழ்வு பேட்டை 20 வது வார்டு வட்ட செயலாளர், மாமன்ற உறுப்பினர் மன்சூர் ஏற்பாட்டில் நடைபெற்றது.நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல்வஹாப் எம்.எல்.ஏ. பங்கேற்று ஏழைகளுக்கு அரிசியை வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.